திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# விவசாயப் பொருள்காட்சி இன்று தொடக்கம்

First Published : 06 Aug 2010 08:49:55 AM IST

விழுப்புரம், ஆக. 5: விழுப்புரம் புதிய பஸ் நிலையம் அருகே உள்ள வி.வி.ஏ. ஆறுமுகம் மகாலில் 6-ம் தேதி தொடங்கி 9-ம் தேதி வரை விவசாய பொருள்காட்சி நப்பெறுகிறது. ÷இதை மாவட்ட ஆட்சியர் ஆர். பழனிச்சாமி வெள்ளிக்கிழமை தொடங்கி வைக்கிறார்.

÷இந்த கண்காட்சியை சென்னை டிரேட் ஈவண்ட்ஸ் நிறுவனம் நடத்துகிறது. இதுகுறித்து அந்நிறுவன வணிக இயக்குநர் இரா. இளங்கோ நிருபர்களிடம் கூறியது:

÷இந்த பொருள்காட்சியில் விவசாயத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மை அறிவியல் நிலையம், தென்னிந்திய காட்டன் மில்ஸ் சங்கம், ரோவர்ஸ் விவசாயக் கல்லூரி, பெங்களூர் காபி கழகம், ராஷ்ட்ரிய கெமிக்கல்ஸ் மற்றும் பெர்டிலைசர்ஸ், இந்தியன் பொட்டாஷியம் நிறுவனம் ஆகிய துறைகள் கலந்து கொள்கின்றன.

÷பொருள்காட்சியில் 100 அரங்குகள் அமைக்கப்பட்டு, விவசாய உபகரணங்கள், விவசாய தொழில்நுட்பம், டிராக்டர்கள், நுண்ணிய உயிர் உயர் விளைச்சல் தொழில்நுட்பம், பம்ப்புகள், சொட்டு நீர்ப் பாசனம், செடிகள், விதைகள், தென்னங்கன்றுகள், விவசாயப் புத்தகங்கள் மற்றும் பல அறிய கண்டுபிடிப்புகளும் இடம்பெறுகின்றன.

÷இந்த பொருள்காட்சி தினமும் காலை 10 மணி முதல் இரவு 7.30 மணி வரை நடைபெறும். எந்த நிலத்தில் என்ன பயிர் செய்யலாம் என்பதற்கு சரியான தீர்வு கிடைக்க இந்த பொருள்காட்சி வழிகாட்டியாக இருக்கும்.

÷மேலும் விவசாயிகளுக்கு தேவையான அனைத்து உபகரணங்களும் ஒரே இடத்தில் வாங்க, உற்பத்தியாளர்களிடம் நேரடித் தொடர்புக்கு ஒரு பாலமாக இருக்கும். மேலும் இந்த பொருள்காட்சியை பார்வையிட இலங்கை மற்றும் சீனாவிலிருந்து விவசாயக் குழுவினர் வருகை தர உள்ளனர். இதன் மூலம் இங்குள்ள உற்பத்தியாளர்கள் தங்கள் தயாரிப்புகளை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்புகள் அதிக அளவில் உள்ளன என்று தெரிவித்தார்.

**விதை கிராம திட்டத்தில் விதை நெல் விநியோகம்**

First Published : 06 Aug 2010 08:41:25 AM IST

உளுந்தூர்பேட்டை, ஆக. 5: உளுந்தூர்பேட்டை வட்டம் எறையூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில் அதையூர் கிராம விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் வெள்ளைப் பொன்னி ரக நெல் விதை செவ்வாய்க்கிழமை முதல் வழங்கப்பட்டு வருகிறது.

÷மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அரங்கநாதன் விவசாயிகளுக்கு நெல்விதை, நுண்ணுயிர் நுண்ணுரம் வழங்கி பேசியது: விதை கிராமத் திட்டத்தின் கீழ் 50 சதவிகித மானிய விலையில்  நெல் விதை தற்பொழுது வழங்கப்பட்டு வருகிறது. இந்த விதையைப் பயன்படுத்தி விதைப்பண்ணை அமைத்து, கலவன் எடுத்து அடுத்த பருவத்திற்கு அந்தந்த கிராமத்திற்குள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். விதைக்காக தனியாரிடமோ, அரசிடமோ வராமல் தங்களுக்குள்ளேயே விதை உற்பத்தி செய்து விதை சேகரிப்பு செய்து பயன்பெற வேண்டும். விதைகளை சேகரம் செய்வதற்கு பயன்படும் விதை சேமிப்பு கொள்கலன் 50 சதவிகித மானிய விலையில் வழங்கப்பட உள்ளது என்றார்.

÷இந் நிகழ்ச்சியில் வேளாண்மை உதவி இயக்குநர் ரவீந்திரன், துணை வேளாண்மை அலுவலர் தமிழரசன், உதவி வேளாண்மை அலுவலர்கள் அந்தோணிசாமி, சுதர்சன், ராஜக்கண்ணு உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**இலவச காய்கறி விதைகள் விநியோகம்**

First Published : 06 Aug 2010 08:41:07 AM IST

திண்டிவனம், ஆக. 5: ஆடிப்பெருக்கு விழாவை முன்னிட்டு திண்டிவனத்தில் அரிமா சங்கம் மற்றும் பாண்டியன் உர டிப்போ சார்பில் பொதுமக்களுக்கு காய்கறி விதைகள் வழங்கும் நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மக்கள் தங்கள் வீட்டுத் தோட்டத்தில் பயரிடும் வகையில் அவரை, பீர்க்கன், முள்ளங்கி உள்ளிட்ட காய்கறி விதைகள் மற்றும் கீரை விதைகள் 2 ஆயிரம் பாக்கெட்டுகள் இலவசமாக வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் உர டிப்போ உரிமையாளர் பாண்டியன் வரவேற்றார். அரிமா சங்கம் சார்பில் செயலர் முரளி, பொருளாளர் சத்தியவேந்தன், ராஜேந்திரன், வெங்கடேசன், சின்னசாமி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். அரிமா ஜாகிர்உசேன் நன்றி கூறினார்.

**சம்பா நெல் நாற்றங்கால் பயிர் பாதுகாப்பு முறை**

First Published : 05 Aug 2010 02:54:25 PM IST

சங்ககிரி, ஆக. 4:  சம்பா நெல் நாற்றங்கால் பயிர் பாதுகாப்பு குறித்து விவசாயிகளுக்கு சங்ககிரி வேளாண் உதவி இயக்குநர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

÷இது குறித்து உதவி இயக்குநர் ப.செளந்தரராஜன் கூறியுள்ளதாவது:-

பூச்சி, நோயால் பாதிப்பில்லாத வாளிப்பான, வீரியமான தரமான நாற்றுக்களை நடுவதால் மட்டுமே நடவு வயலில் அதிக தூர்கள் உருவாகி நிறைந்த விளைச்சல் பெற இயலும். நெல் நாற்றங்காலை சாறு உறிஞ்சும் பூச்சிகளான இலைப்பேன், பச்சைத் தத்துப்பூச்சி ஆகிய பூச்சிகள் தாக்கி நாற்றுக்களின் தரத்தை பாதிக்கும்.

இப்பூச்சிகளின் தாக்குதலால் நாற்றின் இலைகள் சுருண்டு, மஞ்சளாகி வெளுத்து வாடிக் காணப்படும்.  ÷நாற்றங்காலில் 10 சதவீத நாற்றுக்களில் மேல் இரண்டு இலைகள் அரைபாகம் சுருண்டு இருந்தாலோ, 5 இடங்களில் கையால் 5 முறை தடவும்போது பேன்களின் எண்ணிக்கை 25ஐ தாண்டினாலோ பொருளாதார சேத நிலையைத் தாண்டியுள்ளது எனக் கணக்கில் கொண்டு உரிய பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

÷பச்சைத் தத்துப்பூச்சியாக இருந்தால் ஒரு சதுரமீட்டருக்குள் 20 பூச்சிகள் இருந்தால் பொருளாதார சேத நிலையாக கணக்கில் கொள்ள வேண்டும்.

இவற்றை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கான நாற்றங்காலில் மானோகுரோட்டபாஸ் 36 டபிள்யூ.எஸ்.சி மருந்து 40 மில்லி அல்லது பாசலோன் 35 ஈ.சி. மருந்து 60 மில்லி அல்லது பென்தியான் 100 ஈ.சி மருந்து 20 மில்லி ஆகிய மருந்துகளில் ஏதேனும் ஒன்றை தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**போலி இயற்கை உரங்கள்: விவசாயிகளே உஷார்!**

First Published : 06 Aug 2010 02:33:54 AM IST




உரக் கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள வேப்பம் பிண்ணாக்கு, இயற்கை உரங்கள்.

உரக் கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள வேப்பம் பிண்ணாக்கு, இயற்கை உரங்கள்.
கடலூர்: மேலை நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்தியா குறைந்த அளவிலேயே ரசாயன உரங்களைப் பயன்படுத்துவதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.
இருப்பினும் குறைந்த அளவிலான ரசாயன உரங்களின் பயன்பாடே, தற்போது நமது இயற்கை வேளாண் விஞ்ஞானிகளால் பெரிதும் விமர்சனத்துக்கு உள்ளாகி வருகிறது.
ஒருகாலத்தில் அதிக அளவில் பயன்படுத்தப்பட்ட டி.டி.டி., பி.எச்.சி. பூச்சிக்கொல்லி மருந்துகள், தற்போது தடை செய்யப்பட்டுள்ளன. காரணம், டி.டி.டி. மருந்தின் நச்சுக் கழிவுகள், தாய்ப்பாலில் இருந்தது ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டது. பல ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளின் நச்சு, கரைந்து போகாமல் தங்கி விடுவதே, மோசமான விளைவுகளுக்குக் காரணம்.
எனவேதான் இயற்கை உரங்களைப் பயன்படுத்தி, உடல் நலத்துக்குக் கேடு விளைவிக்காத தானியங்களையும் காய்கறிகளையும் பழங்களையம் உற்பத்தி செய்ய வேண்டும் என்று பரவலாகப் பேசப்பட்டு வருகிறது.

இயற்கை உரங்களின் பட்டியலில், நுண்ணுயிர் உரங்கள், மண்புழு உரங்கள், வேப்பம் பிண்ணாக்கு போன்றவை முக்கிய இடம் வகிக்கின்றன.
இயற்கை உரங்களின் பயன்பாட்டை வலியுறுத்தும் அதே நேரத்தில், இயற்கை உரங்கள் என்ற பெயரில், பல போலிஉரங்கள் உலா வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கிறார்கள்.
எள்ளுப் பிண்ணாக்கு, மணிலா பிண்ணாக்கு ஆகியவற்றில் வேப்பெண்ணெயைத் தெளித்து, வேப்பம் பிண்ணாக்கு என்ற பெயரில் விற்பனை செய்யப்படுகிறது.
திரவ வடிவில் அசோஸ்பி, பாஸ்போமிக்ஸ், பொட்டாஷ் ஆக்டிவா, ஜிங்க் ஆக்டிவேட்டர் போன்ற இயற்கை உரங்கள் கவர்ச்சிகரமான பொட்டலங்களில் உரக்கடைகளில் விற்பனைக்கு உள்ளன.
பன்னாட்டு நிறுவனங்களும், உள்ளூரில் சிறிய அளவில் குடிசைத் தொழில்போல் பலரும் இந்த இயற்கை உரங்களைத் தயாரித்து, பயிர் வளர்ச்சி உரங்கள், இயற்கை பூச்சிக்கொல்லி மருந்துகள் என்ற பெயரில் விற்கிறார்கள். ஒரே இயற்கை உரம், பயிர்களுக்கு பல்வேறு சத்துகளை அளிப்பதாக விளம்பரம் செய்கிறார்கள்.

இவற்றைத் தயாரிப்பதற்கான அனுமதியை பெற, ரூ.300 கட்டணம் செலுத்தி, வேளாண்மைப் பல்கைலக்கழகத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்பது மட்டுமே.ரசாயன உரங்களுக்குத் தரக் கட்டுப்பாடு உள்ளது. அதற்கான சட்டங்களும் உள்ளன. நுண்ணுயிர் உரங்களில் ஒரு கிராமில் ஒரு மில்லியன் நுண்ணுயிர்கள் இருக்க வேண்டும் என்று தரக் கட்டுப்பாடு உள்ளது. அதேபோல் மண்புழு உரங்கள், நகர கம்போஸ்டு உரங்களுக்கும் தரக் கட்டுப்பாடு உள்ளது.

எனவே உரக் கட்டுப்பாடு அலுவலர்கள், அடிக்கடி உரக்கடைகளில் மாதிரிகளைச் சேகரித்து ஆய்வுக் கூடத்துக்கு அனுப்பி, தரம் குறைவாக இருந்தால் அத்தகைய உரங்களை தயாரித்தோர், விற்பனை செய்தோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

ஆனால் சந்தையில் விற்பனையாகும் ஏனைய இயற்கை உரங்களுக்கு எந்தத் தரக்கட்டுப்பாடும், அதற்கான சட்டங்களும் இல்லை என்கிறார்கள் வேளாண் அலுவலர்கள். இதனால் விளம்பரங்களை நம்பி இந்த இயற்கை உரங்களை வாங்கிப் பயன்படுத்தினால் பாதிக்கப்படுவது விவசாயிதான் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.குப்பையில் இருந்து மண்புழு உரம் தயாரித்து விற்பனை செய்து வரும் பட்டாம்பாக்கம் பேரூராட்சித் தலைவர் ஜெயமூர்த்தி இதுபற்றிக் கூறுகையில், ""மாதம் 3 முதல் 4 டன்கள் வரை தயாரித்து விற்பனை செய்கிறோம். காய்கறிச் செடிகளுக்கும், நிறுவனங்களில் புல்வெளிகள் அமைப்போரும் இந்த உரத்தை விரும்பி வாங்குகிறார்கள். அதிக அளவில் பயன்படுத்த இன்னமும் விழிப்புணர்வு ஏற்படவில்லை. ஆனால் இயற்கை உரங்கள் என்ற பெயரில் பல டானிக்குகள், பூச்சிக்கொல்லி மருந்துகள் விற்பனைக்கு வருகின்றன. புதுவை மாநிலத்தில் இத்தைகைய இயற்கை உரங்களை அதிகம் தயாரிப்பதாக அண்மையில் என்னை சந்தித்துத் தெரிவித்தனர். ஆனால் அவற்றின் தரம் பற்றி யாருக்கும் தெரியாது" என்றார்.

இதுகுறித்து விவசாய சங்கங்களின் கூட்டமைப்பின் மாவட்ட அமைப்புச் செயலாளர் பி.ரவீந்திரன் கூறுகையில், ""இயற்கை உரங்களுக்கு தரக் கட்டுப்பாடு சட்டங்கள் கொண்டுவர வேண்டும். குறைந்தபட்சம் வேளாண் அலுவலர்களின் பரிந்துரைப்படி விற்கவேண்டும் என்ற கட்டுப்பாடாவது
இருக்க வேண்டும்" என்றார் அவர்.

**நெல் விலை உயர்வு!**

First Published : 05 Aug 2010 02:53:59 PM IST

கோபி, ஆக.4: கோபியில் நெல் சாகுபடி பரப்பளவு குறைந்ததால் நெல்லின் விலை உயர்ந்துள்ளது.

÷மஞ்சள் விலை உயர்ந்ததால் கோபி அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதி விவசாயிகள் மஞ்சள் சாகுபடியை அதிகப்படுத்தினர். இதனால் நெல் சாகுபடி பரப்பளவு கணிசமாக குறைந்ததால் நெல் விற்பனை விலை உயர்ந்துள்ளது.

÷2009ம் ஆண்டு துவக்கத்தில் இருந்து மஞ்சள் விலை படிப்படியாக அதிகரித்தது. ஒரு கட்டத்தில குவிண்டால் மஞ்சள் விலை ரூ.17 ஆயிரத்தை நெருங்கியது. இதனால் கோபி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் நெல்லுக்கு இணையாக மஞ்சள் பயிரிடத் துவங்கினர்.

÷கடந்தாண்டு இரண்டாம் போகத்திலேயே மஞ்சளை விவசாயிகள் அதிகளவில் பயிரிட்டனர். இதனால் நெல் பயிரிடும் பரப்பளவு கணிசமாக குறைந்தது. நெல்லுக்கு தேவை அதிகரித்ததால், விவசாயிகளை நேரடியாக தேடிச் சென்று வியாபாரிகள் நெல்லை வாங்கினர். இதனால் இரண்டாம் போக சாகுபடி முடிவில் கோபி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் அமைக்கப்பட்ட அரசு கொள்முதல் நிலையங்களில் கூட எதிர்பார்த்த அளவு நெல் வரவில்லை. இந்நிலையில் நெல் சாகுபடி குறைவால் தற்போது விலை அதிகரித்துள்ளது.

÷கடந்த ஜனவரி மாதத்தில் டீலக்ஸ் பொன்னி நெல் ஒரு பொதி (264 கிலோ) ரூ.3,300 வரை விற்றது. தற்போது ரூ.3,800 வரை உயர்ந்துள்ளது. ஏ.டி.பி39 ரூ.2500 இருந்து ரூ.3,000-க்கும், ஏ.எஸ்.டி இட்லி குண்டு நெல் ரகத்தின் விலை ஒரே சீராக இல்லாமல் ஏற்றமும் இறக்கமுமாக உள்ளது.

÷கர்நாடக டீலக்ஸ் நெல் ஒரு கிலோ ரூ.14ல் இருந்து ரூ.19.50க்கும் விலை உயர்ந்துள்ளது. நெல் விலை உயர்வால் கர்நாடக டீலக்ஸ் அரிசி 75 கிலோ மூட்டை ரூ.2000ல் இருந்து ரூ.2,100க்கும் டீலக்ஸ் ரூ.1,800ல் இருந்து ரூ.2,150க்கும் ஏ.டி.டி39 ரூ.1400ல் இருந்து ரூ.1,550க்கும் விலை உயர்ந்துள்ளது.

÷கோபி அரக்கன்கோட்டை, தடப்பள்ளி மற்றும் கீழ்பவானி பகுதிகளில் கடந்த இரண்டாம் போகத்தில் நெல் சாகுபடி பரப்பளவு குறைந்ததாலும், தஞ்சை வட்டாரத்தில் பயிரிடப்பட்ட நெல் வகைகள் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுவதாலும் நெல் விலை தற்போது உயர்ந்துள்ளது.

**உஷார்... தென்னையை தாக்கும் புதிய எதிரி!**

First Published : 05 Aug 2010 02:53:23 PM IST

கோவை, ஆக. 4: ஈரியோபைட் தாக்குதலில் தென்னை விவசாயம் பெரும் பாதிப்பு அடைந்த நிலையில், தற்போது தென்னையை புதிய பூச்சி தாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தற்போது இந்தியாவில் இதன் தாக்கம் இல்லையென்றாலும், இலங்கை, மாலத் தீவு வழியாக தென்னிந்தியாவுக்கு வர வாய்ப்பு இருப்பதாக வேளாண் ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கின்றனர்.

தென்னையின் குருத்து ஓலைகளைத் தாக்கும் இந்த தென்னை இலை வண்டின் தாக்குதல், இந்தியாவுக்கு மிக அருகில் இருக்கும் தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், மியான்மர், சீனா, மலேசியா, சிங்கப்பூர், கம்போடியா, லாவோஸ் ஆகிய நாடுகளிலும் மாலத் தீவிலும் காணப்படுகிறது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

தென்னை இலை வண்டு குறித்தும் அதைக் கட்டுப்படுத்துவது குறித்தும் வேளாண் துறை களப் பணியாளர்களுக்கு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் அண்மையில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

"பப்பாளி மாவுப்பூச்சி, கரும்பில் அசுவுணி தென்னையில் ஈரியோபைட், சிலந்தி போன்ற வெளிநாடுகளில் இருந்து இந்தியாவுக்கு வந்த பூச்சிகளால் பல்வேறு பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் தென்னை இலைத் தண்டு பூச்சி தாக்குதல் வர வாய்ப்பு உள்ளது' என்று வேளாண் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ப.முருகேச பூபதி தெரிவித்தார்.

"தென்னையைத் தாக்கும் இலை வண்டு அதிக சேதத்தை ஏற்படுத்தக் கூடியது. இந்த வண்டு இளம் கன்றுகளை தொடர்ச்சியாகத் தாக்கினால், தென்னங்கன்றுகள் பட்டுப்போய்விடும். எண்ணெய் பனை, பனைமரம், பாக்குமரன், ராயல் பனை, சீனா விசிறி பனை, கலிபோர்னியா விசிறி பனை போன்ற தென்னை குடும்பத்தைச் சேர்ந்த 20 வகையான பயிர்களைத் தாக்கக் கூடியது' என்று பெங்களூரைச் சேர்ந்த வேளாண்சார் பூச்சி ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் ஆர்.ஜே.ரபீந்திரா.

காவி கலந்த சிவப்பு நிறம் உடைய இந்த வண்டு தென்னை ஓலைகளில் வாழ்க்கை நடத்துகிறது. இதன் பருவ காலம் 5-லிருந்து 7 வாரங்கள். இரவில் மட்டுமே தென்னை மரங்களைத் தாக்கும் இயல்புடையது.

வளர்ந்த வண்டுகள் 3 மாதம் வரை உயிர் வாழக்கூடியது. இதன் புழு மற்றும் வண்டு பருவத்தில் இலைகள் மற்றும் குருத்தோலைகளின் பச்சையத்தை சுரண்டி உண்பதால் இலைகளின் ரினம் மாறி கருகி காணப்படும். இதன் தாக்குதல் 8 ஓலைகளில் இருந்தாலே மகசூல் பாதிக்கும். இந்த வண்டு 10 வயதுடைய தென்னை மரங்களை அதிகமாக தாக்குகிறது. இதனால் மகசூல் இழப்பு அதிகமாக ஏற்படுகிறது.

தாக்கப்பட்ட தென்னங்கன்றுகள் மற்றும் தாக்கப்பட்ட அலங்கார பனைகளை இறக்குமதி செய்யும்போது இந்த வண்டுகள் பரவ வாய்ப்புள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இப்பூச்சி தென்பட்டால் உடனடியாக வேளாண் அலுவலகம் அல்லது வேளாண் ஆராய்ச்சி நிலையங்கள், வேளாண் அறிவியல் நிலையங்களை விவசாயிகள் தொடர்பு கொள்ளலாம் என பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

**வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் மானிய விலையில் இயந்திரங்கள்**

First Published : 06 Aug 2010 08:40:24 AM IST

கடலூர், ஆக. 5: தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் கடலூர் மாவட்ட விவசாயிகளுக்கு கீழ்காணும் எண்ணிக்கையில் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மானிய விலையில் வழங்கப்படும் என்று, மாவட்ட ஆட்சியர் பெ.சீதாராமன் புதன்கிழமை அறி
வித்தார்.

÷ஆட்சியரின் செய்திக் குறிப்பு: பல்வகைத் தானியங்கள் கதிரடிக்கும் இயந்திரங்கள் 8. இயந்திரம் ஒன்றுக்கு அதிகபட்ச மானியம் ரூ. 1.5 லட்சம். சோளக் கதிர் அடிக்கும் இயந்திரங்கள் 2. அதிகபட்ச மானியம் இயந்திரம் ஒன்றுக்கு ரூ. 80 ஆயிரம்.
÷8 குதிரைத் திறன் கொண்ட, களை எடுக்கும் கருவிகள் 40. அதிகபட்ச மானியம் ரூ. 50 ஆயிரம். 4 சக்கர 20 குதிரைத் திறன் கொண்ட இடைஉழவு இயந்திரங்கள் 60. அதிகபட்ச மானியம் ரூ. 1.25 லட்சம். பவர் ஸ்பிரேயர்கள் 20. அதிகபட்ச மானியம் ரூ. 20 ஆயிரம்.
÷நெல் நாற்று நடவு இயந்திரங்கள் 15. இயந்திரம் ஒன்றுக்கு மானியம் ரூ. 1.25 லட்சம். பெரிய வகை நாற்று நடவு இயந்திரம் ஒன்று. மானியம் ரூ. 4 லட்சம். பவர் டில்லர்கள் 50. இயந்திரம் ஒன்றுக்கு மானியம் ரூ. 45 ஆயிரம். சுழல் கலப்பைகள் 70. மானியம் ரூ. 20 ஆயிரம். உழவுக் கருவிகள் 3. மானியம் ரூ. 10 ஆயிரம்.

÷நெல் அறுவடை இயந்திரங்கள் 10. இயந்திரம் ஒன்றுக்கு மானியம் ரூ. 4 லட்சம். கரும்பு சோகையை தூளாக்கும் இயந்திரங்கள் 2. மானியம் ரூ. 1 லட்சம். நிலம் சமன் செய்யும் லேசர் லெவலர் இயந்திரங்கள் 2. மானியம் ரூ. 1.7 லட்சம். செயின்வாள் போன்ற தோட்டக்கலை கருவிகள் 25. மானியம் ரூ. 25 ஆயிரம். இருபாலரும் இயக்கக்கூடிய சிறுவேளாண் கருவிகள் 300. மானியம் ரூ. 5 ஆயிரம். நெல் நாற்று தயாரிக்கும் தட்டுகள் 3 ஆயிரம். மானியம் ரூ. 50.
÷மேலும் வேளாண் கூட்டுறவுச் சங்கங்களின் 5 சுய உதவிக் குழுக்களுக்கு டிராக்டர் தவிர்த்து இதர வேளாண் கருவிகள் 50 சதவீதம் மானியத்தில் வழங்குதற்கு, குழு ஒன்றுக்கு மானியம் ரூ. 8 லட்சம்.
÷மேற்கண்ட கருவிகள், இயந்திரங்களுக்கு, இந்த ஆண்டுக்கான விலை மற்றும் கம்பெனிகள் அங்கீகாரம் பெறப்பட்ட உடன் முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.
÷இத் திட்டம் குறித்து விவசாயிகள், கடலூர் வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர், சிதம்பரம், விருத்தாசலம் உதவி செயற்பொறியாளர்களை அணுகி பயன் அடையலாம் என்றும் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

**ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் விவசாயிகளுக்கு இலவசப் பயிற்சி**
First Published : 05 Aug 2010 12:26:43 PM IST

பெரம்பலூர், ஆக. 4: பெரம்பலூர் அருகேயுள்ள வாலிகண்டபுரத்திலுள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் ஆக. 7, 11 மற்றும் 18 ஆகிய தேதிகளில் விவசாயிகளுக்கான இலவசப் பயிற்சி அளிக்கப்படுகிறது.
இதுகுறித்து அந்த மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா. மாரிமுத்து செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

இப்பயிற்சியில், மஞ்சள், பருத்தி, வெங்காயம், மக்காச்சோளம் ஆகியவற்றின் சாகுபடி முறைகள், விதை நேர்த்தி, ஒருங்கிணைந்த உர மேலாண்மை, ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு உள்ளிட்டவை குறித்து தொழில்நுட்ப வல்லுநர்கள் சி. சங்கர், ஜே. கதிரவன், ஆர். பிரிஸ்கா பிளேவியா ஆகியோர் செயல் விளக்கத்தோடு பயிற்சியளிக்கவுள்ளனர். மேலும், பயிற்சிக்கான கையேடுகளும் வழங்கப்படும்.

எனவே, ஆர்வமுள்ள விவசாயிகள், மகளிர் சுய உதவிக்குழுக்கள், விவசாயத்தில் ஈடுபடும் தொண்டு நிறுவன அலுவலர்கள் இதில் பங்கேற்று பயன்பெறலாம்.

பங்கேற்க விருப்பமுள்ளோர் தங்களது பெயரை 04328- 293251, 293592, 292356, 9443807381, 9790491566, 9842382934 ஆகிய எண்களிலும், கடிதம் மூலமாகவும் தொடர்புகொண்டு பதிவு செய்துகொள்ள வேண்டும்.

இப் பயிற்சியானது காலை 10 மணிக்குத் தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெறும் என்றார் அவர்.

**செம்மை நெல் சாகுபடி பயிற்சி முகாம்**

First Published : 05 Aug 2010 11:34:51 AM IST

திருச்சி, ஆக. 4: திருச்சி அருகேயுள்ள சிறுகமணி வேளாண் அறிவியல் நிலையத்தில் செம்மை நெல் சாகுபடி குறித்த பயிற்சி முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

தோட்டக்கலை உதவிப் பேராசிரியர் ஈஸ்வரன் முகாமைத் தொடக்கி வைத்தார்.

உழவியல் துறை உதவிப் பேராசிரியர் ஆ. அழகேசன், முனைவர் மா. ரவி, முனைவர் ம. மலர்கொடி ஆகியோர் செயல் விளக்கம் அளித்தனர். முன்னதாக, வேளாண் விரிவாக்க உதவிப் பேராசிரியை சி. சிந்தியா வரவேற்றார்.

**மானாவாரியில் காராமணி சாகுபடி!**

First Published : 05 Aug 2010 09:24:29 AM IST

அரக்கோணம், ஆக.4: பயறு வகைகளில் அதிக சத்துகளைக் கொண்டது காராமணி. இதில் 23.4 சதவீதம் புரதம், 1.8 சதவீதம் கொழுப்பு, 60.3 சதவீதம் கார்போஹைட்ரேட், கால்சியம் மற்றும் இரும்புசத்து ஆகியவை உள்ளன.

கால்நடைகளுக்கு ஏற்ற பயிராகவும் காராமணி உள்ளது. குதிரை மசாலை விடவும் மிகச் சிறந்தது. இதை தொடர்ந்து சாகுபடி செய்து பசுந்தாள் உரமாகவும் பயன்படுத்தலாம். இது மானாவாரிக்கு மிகவும் உகந்த பயிராகும்.

காராமணி ஆப்பிரிக்காவில் பயிரிடப்படுகிறது. உலக சாகுபடியில் 90 சதவீதம் ஆப்பிரிக்காவில் சாகுபடியாகிறது. மேலும் தென், வடஅமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் பரவலாக பயிரிடப்படுகிறது.

இந்தியாவில் உத்தரபிரதேசம், பஞ்சாப், தில்லி, ஹரியாணா, தென்இந்தியாவில் தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் அதிகம் பயரிடப்படுகிறது.

இதை ஆண்டு முழுவதும் பயிரிடலாம். இருந்தாலும் மார்ச்-ஏப்ரல், ஜூலை-ஆகஸ்ட் மாதங்கள் சாகுபடிக்கு மிகவும் சிறந்த பருவமாகும். தமிழ்நாட்டில் ஆடிப் பட்டத்தில் வேலூர், திருவண்ணாமலை, தர்மபுரி மாவட்டங்களில் பயிரிட கோ-6, பையூர்-1, பூசா-152, கோ(சி.பி.)-7 ரகங்கள் சிறந்தவை.

கோ-6 பயிரை 55 நாட்களில் அறுவடை செய்யலாம். அனைத்து பருவங்களிலும் ஏக்கருக்கு 670 கிலோ மகசூல் பெறலாம். பையூர்-1 பயிரை 75 நாட்களில் ஜூன்-ஜூலை, பிப்ரவரி-மார்ச் மாதங்களில் பயிரிட்டு 900 கிலோ மகசூல் பெறலாம். பூசா-152 ரகத்தை 75 நாட்களில் அனைத்து பருவங்களிலும் பயிரிட்டு 1200 கிலோ வரை மகசூல் பெறலாம்.

பையூர்-1, கே.எம்.1, கோ-2, கோ-3 சாகுபடிக்கு ஹெக்டேருக்கு விதைஅளவு தனிப்பயிராக இருந்தால் 20 கிலோவும், கலப்புப்பயிராக இருந்தால் 10 கிலோவும் இருக்க வேண்டும். பயிர் எண்ணிக்கை ஹெக்டேருக்கு 3.50 லட்சம் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். ரகங்களுக்கு ஏற்றவாறு இடைவெளி 30-10 செ.மீ., 45-15 செ.மீ. இருப்பது போல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

காரமணியை பயிரிட நிலத்தை நன்கு உழுது மண்ணை பதப்படுத்த வேண்டும். நன்கு வடிகால் வசதியும் அமைக்க வேண்டும். ஆழமாக உழுவது மிகவும் நல்லது. காராமணி பயிருக்கு பரவலாக மழை பெய்யும் காலங்களில் நீர் பாய்ச்சத் தேவையில்லை.

இப்பயிருக்கு முதல் கைக்களை 10-15 நாட்களிலும், இரண்டாவது கைக்களை 25-30 நாட்களிலும் எடுக்க வேண்டும். இறவையாக சாகுபடி செய்யும்போது ஹெக்டேருக்கு பாசலின் 1.5 லிட்டர் என்ற களைக்கொல்லி மருந்தை 900 லிட்டர் தண்ணீரில் கலந்து விதைத்த 3-வது நாளில் தெளிக்க வேண்டும்.

காய்கள் 80 சதவீதம் விதை முற்றியவுடன் அறுவடை செய்து சில நாட்கள் சூரிய ஒளியில் காயவைத்து விதையை பிரித்து எடுக்க வேண்டும்.

காராமணி பயிரிடுவது குறித்து மேலும் விவரங்கள் தேவைப்படுவோர் அவர்களது பகுதியில் உள்ள வேளாண் அலுவலகங்களை தொடர்பு கொள்ளலாம் என்று காவேரிப்பாக்கம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் வி.ஜெயச்சந்திரன், வேளாண் அலுவலர் டி.பாபு, உதவி அலுவலர் ஜி.திருக்குமார் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

**தக்காளியில் இலைப்புள்ளி நோய்த் தாக்குதலா?**

First Published : 05 Aug 2010 09:23:59 AM IST

கிருஷ்ணகிரி, ஆக.4: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள தக்காளி பயிரில் இலைப்புள்ளி நோய்த் தாக்குதல் அதிகம் காணப்படுகிறது. இதைக் கட்டுப்படுத்தும் முறை குறித்து பையூர் வேளாண்மை பல்கலைக்கழக பேராசிரியர் கல்பனா தெரிவித்துள்ளார்.

அவர் கூறியது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 5 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் தக்காளி சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு ஆண்டுக்கு 3 லட்சம் டன் தக்காளி உற்பத்தியாகிறது.

தற்போதுள்ள பருவ நிலை காரணமாக தக்காளி பயிரில் இலைப்புள்ளி நோயின் தாக்குதல் அதிகம் காணப்படுகிறது. குறிப்பாக சூளகிரி, காமன்தொட்டி, பேரிகை மற்றும் கிட்டம்பட்டி பகுதிகளில் இந்நோயின் தாக்குதல்கள் அதிகம் காணப்படுகிறது. இதனால் 60 சதவீதம் மகசூல் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது.

நோய்க்கான அறிகுறிகள்: இலைப்புள்ளி நோய், பாக்டீரியாவால் ஏற்படுகிறது. இந்நோய் தக்காளி பயிரின் இலை, தண்டு, பூ மற்றும் காய்களைத் தாக்கும் தன்மை கொண்டது. தாக்கப்பட்ட பயிரின் இலையின் மேல் வட்ட வடிவமாக அல்லது ஒழுங்கற்ற கருமை நிற புள்ளிகள் முதலில் காணப்படும். பின்னர் இந்தப் புள்ளிகளைச் சுற்றிலும் மஞ்சள் நிற வளையங்கள் தோன்றும். குறிப்பாக இந்தப் புள்ளிகள் இலையின் ஓரங்கள் மற்றும் நுனிப் பகுதியில் காணப்படும். பிறகு இவை பெரிய புள்ளிகளாக மாறும். நோய்த் தாக்குதலுக்கு உள்ளான பயிர்கள் கருகியது போல் காணப்படும். பின்னர் செடியானது காய்ந்து உதிர்ந்து விடும்.

சிறிய அடர்ப் பழுப்பு அல்லது கருமையான புள்ளிகள் இளம் காய்கள் மீது காணப்படும். காய் பழுக்கும்போது இவை மறைந்து விடும் என்றாலும், நோய்த் தாக்கப்பட்ட பழங்களில் இந்தப் புள்ளிகள் அதிகம் காணப்படும். இதனால் பழத்தின் தரம் குறையும்.

இலைப்புள்ளி நோய், பல மாதங்கள் விதைகளில் தங்கியிருக்கும். செடிகள் வளரும்போது காற்று மற்றும் மழையால் ஒரு செடியிலிருந்து மற்றோரு செடிக்குப் பரவும்.

இதனால், நோய் எதிர்ப்புத்திறன் கொண்ட ரகங்களையோ, நோய்த் தாக்குதல் இல்லாத விதைகளையோ தேர்வு செய்வது நல்லது.

நோயை கட்டுப்படுத்தும் முறை:

சூடோமோனாஸ் பாக்டீரியா கலவையை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் கலந்து விதை நேர்த்திச் செய்ய வேண்டும். வயல் மற்றும் வரப்புகளில் களைகளை அகற்றி சுத்தமாக வைக்க வேண்டும். நோய்த் தாக்குதலுக்கு உள்ளான பயிரை பிடுங்கி அழிக்க வேண்டும்.

நோய்த் தாக்குதல் காணப்பட்டால், பாக்டீரிய கொல்லியான அக்ரிமைசின் 6 கிராமை 50 லிட்டர் நீரில் கலந்து 10 நாள்கள் இடைவெளியில் 3 நாட்களுக்கு தெளிக்க வேண்டும். மேலும், ஸ்டெரப்டோமைசின் 6 கிராம் மற்றும் காப்பர் அக்ஸி குளோரைடு அல்லது மேன்கோசேப் (மேன்கோசைடு) 100 கிராம் மருத்தை 50 லிட்டர் தண்ணீரில் கலந்து செடியின் தண்டுப் பகுதியில் தெளிக்க வேண்டும்

வயலில் நீர் தேங்காமல் பார்த்துக் கொள்வது நல்லது. தக்காளி, மக்காச்சோளம், தட்டைபயிறு என சுழற்சி முறையில் பயிர் செய்வதன் மூலம் இந்நோயை கட்டுப்படுத்தலாம் என்றார் அவர்.

**நிலக் கடலையில் அதிக மகசூல் பெற உரமிடும் முறை**

First Published : 05 Aug 2010 02:53:03 PM IST

சங்ககிரி, ஆக. 4: நிலக் கடலையில் அதிக மகசூல் பெற தேவையான உரங்களை இட வேண்டியது அவசியாமகும்.

÷ இது குறித்து வேளாண் உதவி இயக்குநர் ப.சௌந்தரராஜன் கூறியது:

மண் பரிசோதனை அடிப்படையில் தழைச் சத்து, மணிச் சத்து மற்றும் சாம்பல் சத்தை ஆய்வு செய்ய வேண்டும். மண் பரிசோதனை செய்யாவிட்டால் ஏக்கர் ஒன்றுக்கு யூரியா மானாவாரியில் 9 கிலோவும், இறவையில் 15, சூப்பர் பாஸ்போட் மானாவாரியில் 25, இறவைக்கு 85, பொட்டாஷ் 3 கிலோவும், இறவையில் 36 கிலோ உரங்களை அடி உரமாக இட வேண்டும். இத்துடன் 5 கிலோ நுண்ணூட்டச் சத்துக் கலவையை தேவையானயளவு மணலுடன் கலந்து விதைத்தவுடன் நிலத்தின் மேல் சீராக தூவ வேண்டும்.

ஜிப்சம் இடுதல்:

நிலக் கடலைப் பயிரில் நன்கு திரட்சியான பருப்புகள் உருவாக சுண்ணாம்புச் சத்து தேவைப்படுகிறது. அடியுரமாக ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் இடவேண்டும். மேலும் நிலக்கடலையின் விழுதுகள் இச்சத்தை நேரடியாக கிரகித்துக் கொள்ளக் கூடியதாக இருப்பதால் காய்கள் உருவாகும் தருணமான விதைத்த 40-45 வது நாட்களில் ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் இட்டு மண் அணைத்தல் அவசியம். ஜிப்சத்தில் 24 சதம் சுண்ணாம்புச் சத்தும், 18.6 சதம் கந்தகச் சத்தும் உள்ளது.

போராக்ஸ் இடுதல்:

விதையில்லா காய்கள் வராமல் தடுக்க ஏக்கருக்கு போராக்ஸ் 4 கிலோவை விதைத்த 45-வது நாளில் ஜிப்சத்துடன் கலந்து இட வேண்டும்.

ஊட்டச் சத்து கரைசல் தெளித்தல்:

நிலக்கடையில் நல்ல மகசூல் பெற ஊட்டச் சத்து கரைசல் தெளித்தல் மிகவும் அவசியம். ஒரு ஏக்கருக்கு டைஅம்மோனியம் பாஸ்பேட் ஒரு கிலோவை 20 லிட்டர் தண்ணீரில் இரவில் ஊற

வைத்து தெளிந்த நீரை எடுத்துக் கொள்ள வேண்டும். இந்நீரில் போராக்ஸ் 300 கிராம், ஜிங்க் சல்பேட் 250 கிராம், பெரஸ் சல்பேட் 500 கிராம் ஆகியவற்றை கலந்து இத்துடன் ப்ளானோபிக்ஸ் என்ற வளர்ச்சி ஊக்கியை 100 மி.லி. கலக்க வேண்டும். இக்கரைசலை 100 லிட்டர் கரைசலாக ஆக்கிக் கொள்ள வேண்டும். இவற்றை விதைத்த 30 மற்றும் 45 நாட்களில் மாலை வேளையில் தெளிக்க வேண்டும். இதன் மூலம் நல்ல திரட்சியான காய்கள் அதிகம் பிடிப்பதுடன், எண்ணெய் சத்தின் சதவீதமும் அதிகரிக்கும் என வேளாண் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**சம்பா நெல் நாற்றங்கால் பயிர் பாதுகாப்பு முறை**

**First Published** : 05 Aug 2010 02:54:25 PM IST

சங்ககிரி, ஆக. 4:   சம்பா நெல் நாற்றங்கால் பயிர் பாதுகாப்பு குறித்து விவசாயிகளுக்கு சங்ககிரி வேளாண் உதவி இயக்குநர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

÷இது குறித்து உதவி இயக்குநர் ப.சௌந்தரராஜன் கூறியுள்ளதாவது:-

பூச்சி, நோயால் பாதிப்பில்லாத வாளிப்பான, வீரியமான தரமான நாற்றுக்களை நடுவதால் மட்டுமே நடவு வயலில் அதிக தூர்கள் உருவாகி நிறைந்த விளைச்சல் பெற இயலும். நெல் நாற்றங்காலை சாறு உறிஞ்சும் பூச்சிகளான இலைப்பேன், பச்சைத் தத்துப்பூச்சி ஆகிய பூச்சிகள் தாக்கி நாற்றுக்களின் தரத்தை பாதிக்கும்.

இப்பூச்சிகளின் தாக்குதலால் நாற்றின் இலைகள் சுருண்டு, மஞ்சளாகி வெளுத்து வாடிக் காணப்படும்.  ÷நாற்றங்காலில் 10 சதவீத நாற்றுக்களில் மேல் இரண்டு இலைகள் அரைபாகம் சுருண்டு இருந்தாலோ, 5 இடங்களில் கையால் 5 முறை தடவும்போது பேன்களின் எண்ணிக்கை 25ஐ தாண்டினாலோ பொருளாதார சேத நிலையைத் தாண்டியுள்ளது எனக் கணக்கில் கொண்டு உரிய பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

÷பச்சைத் தத்துப்பூச்சியாக இருந்தால் ஒரு சதுரமீட்டருக்குள் 20 பூச்சிகள் இருந்தால் பொருளாதார சேத நிலையாக கணக்கில் கொள்ள வேண்டும்.

இவற்றை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கான நாற்றங்காலில் மானோகுரோட்டபாஸ் 36 டபிள்யூ.எஸ்.சி மருந்து 40 மில்லி அல்லது பாசலோன் 35 ஈ.சி. மருந்து 60 மில்லி அல்லது பென்தியான் 100 ஈ.சி மருந்து 20 மில்லி ஆகிய மருந்துகளில் ஏதேனும் ஒன்றை தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**விதை கிராம திட்டத்தில் விதை நெல் விநியோகம்**

First Published : 06 Aug 2010 08:41:25 AM IST

உளுந்தூர்பேட்டை, ஆக. 5: உளுந்தூர்பேட்டை வட்டம் எறையூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில் அதையூர் கிராம விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் வெள்ளைப் பொன்னி ரக நெல் விதை செவ்வாய்க்கிழமை முதல் வழங்கப்பட்டு வருகிறது.

÷மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அரங்கநாதன் விவசாயிகளுக்கு நெல்விதை, நுண்ணுயிர் நுண்ணுரம் வழங்கி பேசியது: விதை கிராமத் திட்டத்தின் கீழ் 50 சதவிகித மானிய விலையில் நெல் விதை தற்பொழுது வழங்கப்பட்டு வருகிறது. இந்த விதையைப் பயன்படுத்தி விதைப்பண்ணை அமைத்து, கலவன் எடுத்து அடுத்த பருவத்திற்கு அந்தந்த கிராமத்திற்குள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். விதைக்காக தனியாரிடமோ, அரசிடமோ வராமல் தங்களுக்குள்ளேயே விதை உற்பத்தி செய்து விதை சேகரிப்பு செய்து பயன்பெற வேண்டும். விதைகளை சேகரம் செய்வதற்கு பயன்படும் விதை சேமிப்பு கொள்கலன் 50 சதவிகித மானிய விலையில் வழங்கப்பட உள்ளது என்றார்.

÷இந் நிகழ்ச்சியில் வேளாண்மை உதவி இயக்குநர் ரவீந்திரன், துணை வேளாண்மை அலுவலர் தமிழரசன், உதவி வேளாண்மை அலுவலர்கள் அந்தோணிசாமி, சுதர்சன், ராஜக்கண்ணு உள்பட பலர் கலந்துகொண்டனர்.

தினமலர்

**செஞ்சி உழவர் சந்தையில் இலவச காய்கறி விதைகள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 06,2010,02:58 IST

செஞ்சி : செஞ்சி உழவர் சந்தைக்கு காய்கறிகளை கொண்டு வரும் விவசாயிகளுக்கு இலவசமாக காய்கறி விதைகள் வழங்கப்படுகிறது. விழுப்புரம் வேளாண் வணிக துணை இயக்குனர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: செஞ்சி உழவர் சந்தை கடந்த ஓர் ஆண்டாக சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. இப் பகுதியை சேர்ந்த விவசாயிகள் கொண்டு வரும் புத்தம் புதிய காய்கறிகளை நியாயமான விலையில் விற்கின்றனர். மின்னணு எடைத் தராசு மூலம் நுகர்வோருக்கு சரியான எடை உறுதி செய்யப்படுகிறது. செஞ்சி உழவர் சந்தைக்கு காய்கறி கொண்டு வரும் விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறை மூலம் தரமான காய்கறி விதைகள்

இலவசமாக வழங்கப்படுகின்றன. எனவே செஞ்சியை சுற்றி உள்ள பொதுமக்கள் உழவர் சந்தைக்கு வந்து புத்தம் புதிய காய்கறிகளை நியாயமான விலையில், சரியான எடையில் வாங்கி பயனடையும் படி கேட்டுக்கொள்கிறேன். செஞ்சியை சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் காய்கறி விதைகளை பெற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**கரும்பு, கத்தரியில் மாவுப்பூச்சி தாக்குதல் திணடுக்கல்லில் விஞ்ஞானி குழு ஆய்வு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 06,2010,03:45 IST

திண்டுக்கல் : திண்டுக்கல் மாவட்டத்தில் மாவுப் பூச்சி தாக்குதலால் பாதிக்கப்பட்ட பயிர்களை விஞ்ஞானிகள் குழு ஆய்வு செய்தது. மாவட்டத்தில் பருத்தி, கரும்பு, பப்பாளி, கத்தரி, மிளகாய், தென்னை போன்றவற்றில் மாவுப்பூச்சி தாக்குதல் இருப்பது தெரிய வந்தது. வேளாண்மை இணை இயக்குனர் தெய்வேந்திரன், வேளாண்மை கல்லூரி பூச்சியியல் துறை தலைவர் மணிசேகரன், பேராசிரியர் சின்னையன், மக்காச்சோள ஆராய்ச்சி நிலைய தலைவர் ரவிகேசவன், வேளாண்மை துணை இயக்குனர் செல்வராஜ் கொண்ட குழு பல கிராமங்களில் ஆய்வு செய்தனர்.

பூச்சித் தாக்குதல் உள்ள பயிர்களை தீயிட்டு அழிக்க வேண்டும். அல்லது நிலத்தில் ஆழமாக புதைக்க வேண்டும். நிலத்தில் உள்ள களைச்செடிகளை அப்புறப்படுத்த வேண்டும். பயிரிடாத காலத் தில் நிலத்தினை பலமுறை உழுவதால் மாவுப்பூச்சியின் முட்டைகளை அழிக்கலாம். பூச்சியின் தாக்கம் அதிகம் இருந் தால் புரோபனோபாஸ், குளோர்பைரிபாஸ், தையோமீத்தாக்சாம் ஆகிய மூன்றில் ஏதாவது ஒன்றை சுழற்சி முறையில் 10 முதல் 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கலாம். கூடுதல் விபரத்திற்கு வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

**ஆத்மா திட்டத்தில் விவசாயிகளுக்கு பரிசு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 06,2010,02:14 IST

தூத்துக்குடி : ஆத்மா திட்டத்தில் இயற்கை வேளாண்மையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு பரிசு வழங்கப்படுகிறது.தூத்துக்குடி மாவட்டத்தில் முற்றிலுமாக இயற்கை வேளாண்மையைக் கடைபிடித்து அதிக மகசூல் எடுத்து வரும் விவசாயிகளை ஊக்கப்படுத்தும் விதமாக ஆத்மா திட்டத்தின் கீழ் வட்டாரத்திற்கு 3 விவசாயிகளுக்கு தலா ரூ.4000/- ரொக்கப்பரிசு வழங்கிடும் பொருட்டு இம்மாவட்டத்திற்கு மொத்தம் 36 விவசாயிகளுக்கு ரூ.1.44 லட்சம் ஒதுக்கீடு செய்து தூத்துக்குடி கலெக்டர் உத்தரவு பிறப்பித்துள்ளார். இயற்கை வழி விவசாயத்தில் ஈடுபட்டு வரும்

விவசாயிகள் தங்களுடைய பெயர், சாகுபடி செய்து வரும் பயிர், எத்தனை ஆண்டுகளாக இயற்கை வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். தாங்கள் பயன்படுத்தி வரும் இயற்கை வேளாண் இடுபொருள் விபரம், தற்போது பெற்றுவரும் மகசூல் விபரம் போன்றவற்றை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களிடம் அளித்து பெயரினை பதிவு செய்திடும்படி தூத்துக்குடி மாவட்ட வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் திட்ட இயக்குநர் (பொ) வேளாண்மை இணை இயக்குநர் (பொ) ரஞ்சித்சிங் தன்ராஜ் மற்றும் திட்டத்தின் இசைவு அலுவலர் வேளாண்மை உதவி இயக்குநர் (உழவன் பயிற்சி நிலையம்) குருமூர்த்தி ஆகியோர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

**நெல் வயலில் பூச்சி நோய் தடுப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 06,2010,03:25 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி அடுத்த மாதேப்பட்டி, மூங்கில் புதூர் ஆகிய கிராமங்களில் சாகுபடி செய்துள்ள செம்மை நெல் வயலில் அயம்வாம் திட்டத்தில் ஒரே நாளில் 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஒருங்கிணைந்து பூச்சி நோய்களை தடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பெண்ணையாறு படுகையில் ஓசூர், சூளகிரி, வேப்பனப்பள்ளி, கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் வேளாண்மை பொறியில் துறை, வேளாண் வணிகம், மற்றும் விற்பனைத்துறை, மீன்வளர்ப்பு துறை, கால்நடைபராமரிப்பு துறை மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழம் ஆகியோர் இணைந்து அயம்வாம் நீர்வள நிலவளத்திட்டதை செயல்படுத்தி வருகின்றனர். வேளாண்மை துறை மூலமாக செம்மைநெல் சாகுபடி மற்றும் ராகி, மக்காச்சோளம் பயிர்களுக்கு சாகுபடி தொழில்நுட்ப செயல்விளக்க திடல் அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக ஒரு ஹெக்டேருக்கு 9, 000 ஆயிரம் ரூபாய் மதிப்பில் விதை உரம் பூச்சி மருந்துகள் ஆகிய இடுபொருட்கள் மானியமாக வழங்கப்படுகிறது.

**குருணை வடிவ யூரியாவை பயன்படுத்த வேண்டும்: வேளாண் அதிகாரி யோசனை**

First Published : 06 Aug 2010 09:45:29 AM IST

திருவண்ணாமலை, ஆக. 5: விவசாயிகள் குருணை வடிவ யூரியாவை பயன்படுத்த வேண்டும் என வேளாண்மை இணை இயக்குநர் கோமதிநாயகம் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

குருணை வடிவ யூரியாவை பயிர்களுக்கு இடும்போது, பயிர் பச்சை பிடிப்பது, சிறிது காலதாமதம் ஆவதால் குருணை வடிவ யூரியாவை விட சாதாரண யூரியாவையே அதிக அளவில் விவசாயிகள் விரும்புகின்றனர். ஆனால் குருணை வடிவ யூரியாவில்தான் அதிக பலன் உள்ளது.

நன்மைகள்

இரண்டு வகையான யூரியாவிலும் 46 சதம்தான் தழைச்சத்து உள்ளது. குருணை வடிவ யூரியாவில் உள்ள தழைச்சத்து மிகவும் மெதுவாகவும், சீராகவும் நீண்ட நாள்கள் பயிர்களுக்கு கிடைக்கிறது. இதனால் பயிர் நீண்ட நாள்களுக்கு பசுமை மாறாமல் இருக்கும். இதனால் தழைச்சத்து பயன்படுத்தும் அளவும் குறைகிறது.
சாதாரண யூரியாவை மண்ணில் இடும்போது உடனே கரைவதால் தழைச்சத்து நீரின் மூலமாகவும் ஆவியாதல் மூலமாகவும் வீணாகிறது. குருணை வடிவ யூரியாவை பயிர்களுக்கு இடும்போது தழைச்சத்து வீணாகாமல் பயிர்களுக்கு கிடைக்கிறது.

யூரியா குருணை வடிவில் இருப்பதால் பயிர்களுக்கு தெளிப்பது மிகவும் எளிதானது. குருணை வடிவ யூரியாவில் ஈரப்பதம் குறைவாக இருப்பதால் கட்டியாவது இல்லை. திறந்து வைத்திருக்கும் நிலையில் காற்றில் உள்ள ஈரப்பதத்தை உறிஞ்சி தண்ணீராக மாறுவதும் இல்லை.
குருண வடிவ யூரியாவை சேமிப்பதற்கும் உபயோகிப்பதற்கும் எந்தவித சிரமமும் இல்லை. குருணை யூரியா சாதாரண யூரியாவை விட எடை அதிகமாக இருப்பதால் பயிர்களுக்கு இடும்போது காற்று மற்றும் நீரால் அடித்துச் செல்லப்படுவதில்லை.

ஆனால் சாதாரண யூரியா துகள்களாக இருப்பதால் இலையின் மேற்படிப்பில் படிந்து பயிர்களுக்கு சேதம் உண்டாக்குகிறது. எனவே அதிக பயன் உள்ள குருணை வடிவ யூரியாவை பயன்படுத்தி கூடுதல் மகசூல் பெற்று விவசாயிகள் பயன் அடையவேண்டும். மேலும் டிஏபி மற்றும் 20:20:0:13 காம்பளக்ஸ் உரங்களை விவசாயிகள் வாங்கும் போது, குறிப்பிட்ட உர நிறுவனத்தை மட்டுமே கேட்கின்றனர். அனைத்து நிறுவன உரங்களின் தரமும், சத்துக்களின் அளவும் ஓரே அளவிலேயே உள்ளது.
எனவே விவசாயிகள் பயிருக்கு தேவையான உரங்களை மண் பரிசோதனை பரிந்துரையின்படி தேவையான உரங்களை மட்டுமே இட்டு உற்பத்தியை பெருக்கலாம் என்றார் கோமதிநாயகம்.

தினத் தந்தி

## *உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 9.53%–ஆக குறைந்தது*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*காய்கறிகள் மற்றும் பழங்கள் விலை குறைந்ததையடுத்து, ஜூலை 24–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 9.53 சதவீதமாக குறைந்தது. முந்தைய வாரத்தில் இது 9.67 சதவீதமாக இருந்தது.*

*கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், பழங்கள் மற்றும் காய்கறிகள் (3 சதவீதம்), கடல் மீன்கள் (2 சதவீதம்) விலை, முந்தைய வாரத்தைக் காட்டிலும் குறைந்துள்ளது. அதேசமயம், அரிசி (2 சதவீதம்) மற்றும் ஊறுகாய், நறுமண பொருள்கள், மக்காச்சோளம், சோளம், உளுந்து விலை தலா 1 சதவீதம் உயர்ந்துள்ளது.*

*சென்ற ஓர் ஆண்டு காலத்தில், உருளைக்கிழங்கு மற்றும் காய்கறிகள் விலை முறையே 41.14 சதவீதம் மற்றும் 17.32 சதவீதம் குறைந்துள்ளது. எனினும், பருப்பு வகைகள் (20.49 சதவீதம்), அரிசி (7.28 சதவீதம்), கோதுமை (6.79 சதவீதம்), பால் (19.03 சதவீதம்) விலை உயர்ந்துள்ளது.*

*சென்ற 2009–ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 20 சதவீதமாக உயர்ந்து இருந்த உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம், சென்ற இரண்டு வாரங்களாக 10 சதவீதத்திற்கு கீழே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.*

## கோவை, ஊட்டியில் புதிய உழவர்சந்தைகள் வேளாண்துறையினர் தகவல்

*சென்னை, ஆக.6–*

*தமிழகத்தில் கோவை, ஊட்டி உள்பட புதிதாக 25 இடங்களில் உழவர் சந்தைகள் அமைக்கப்படவுள்ளன.*

*ரூ.6 கோடியில் புதிய உழவர் சந்தைகள்*

*விவசாயிகள் தங்களது விளைபொருட்களை பாதுகாப்பாக வைத்து விற்பதற்கு ஏற்ப, மாநிலம் முழுவதிலும் உழவர் சந்தைகளை அரசு அமைத்துள்ளது. இதன்மூலம், விவசாயிகள் தங்களது விளைபொருள்களை அருகில் உள்ள இடத்திலேயே விற்கமுடிகிறது. பொதுமக்களுக்கும் குறைந்த விலையில் காய்கறி மற்றும் பழங்களை வாங்க முடிகிறது. தமிழகத்தில் தற்போது 153 உழவர் சந்தைகள் உள்ளன.*

*இந்த உழவர் சந்தைகள் மூலமாக, ஒரு நாளில் ரூ.3 கோடி மதிப்புள்ள ரூ.2 ஆயிரம் டன் காய்கறி மற்றும் பழங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இதன்மூலம் 8,600 விவசாயிகளும், சுமார் 3½ லட்சம் மக்களும் பயனடைகிறார்கள். இந்த நிலையில், தமிழகத்தில் மேலும் 25 இடங்களில் புதிதாக உழவர் சந்தைகளை திறக்க அரசு திட்டமிட்டுள்ளது. இந்த புதிய உழவர் சந்தைகள், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.6.09 கோடியில் செயல்படுத்தப்படவுள்ளது.*

*இது பற்றி வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வர்த்தக அதிகாரிகள், தினத்தந்தி நிருபரிடம் நேற்று தெரிவித்ததாவது:–*

*22 குளிர்பதன அறைகள்*

*தமிழகத்தில் காஞ்சீபுரம், விழுப்புரம், சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி கோவை, உதகை, ஈரோடு, திருச்சி, பெரம்பலூர், கரூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் புதிய உழவர் சந்தைகள் அமைக்கப்படவுள்ளன. ஆனால், எந்த இடத்தில் அமைப்பது, எப்போது தொடங்குவது என்பது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.*

*இதுதவிர, கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து கடந்த ஜூலை மாதம் வரை, தமிழகத்தில் 22 உழவர் சந்தைகளில் குளிர்சாதன கிடங்கு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவற்றில், ரூ.380 லட்சம் மதிப்புள்ள 2 லட்சத்து 231 ஆயிரம் டன் காய்கறி, பழங்களும், 6 லட்சத்து 77 ஆயிரத்து 170 தனிமலர்களும் வைத்து பாதுகாக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 71 ஆயிரத்து 786 விவசாயிகள் பயன்பெற்றுள்ளார்கள். அவர்களது விளைபொருள்கள் கெட்டுப் போகாமல் சிறப்பாக*

பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தார்கள்.

## நீலகிரி வேளாண்மை துறை அறிவிப்பு: குருணை வடிவ யூரியா உரத்தின் பயன்கள்

ஊட்டி, ஆக.6–

ஊட்டி வேளாண்மை உதவி இயக்குனர் (தர கட்டுப்பாடு) ஜெகதீசன் விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டு உள்ளதாவது:–குருணை வடிவ யூரியாவினை பயிர்களுக்கு இடும் போது பயிர் பச்சை பிடிப்பது சிறிது கால தாமதம் அவதால் குருணை வடிவ யூரியாவினை விட சாதாரண யூரியாவினையே அதிகளவில் விவசாயிகள் விரும்புகின்றனர். ஆனால் குருணை யூரியாவில் தான் அதிக பலன் உள்ளது.

குருணை வடிவ யூரியாவின் நன்மைகள் பின்வருமாறு:–

இரண்டு வகையான யூரியாவிலும் 46 சதவீதம் தான் தழைச்சத்து உள்ளது. குருணை வடிவ யூரியாவில் உள்ள தழைச்சத்து மெதுவாகவும், சீராகவும் நீண்ட நாட்களுக்கு பயிர்களுக்கு கிடைக்கின்றது. இதனால் பயிர் நீண்ட நாட்களுக்கு பசுமை மாறாமல் இருக்கும். மேலும் தழைச்சத்து பயன்படுத்தும் அளவும் குறைகின்றது. சாதாரண யூரியாவினை மண்ணில் இடும் போது உடனடியாக கரைவதால் தழைச்சத்து நீரின் மூலமாகவும், ஆவியாதல் மூலமாகவும் வீணாகிறது. குருணை வடிவ யூரியாவினை பயிர்களுக்கு இடும் போது தழைச்சத்து வீணாகாமல் பயிர்களுக்கு கிடைக்கின்றது. யூரியா குருணை வடிவில் இருப்பதால் பயிர்களுக்கு தெளிப்பது மிகவும் எளிதானது. குருணை வடிவ யூரியாவில் ஈரப்பதம் குறைவாக இருப்பதால் கட்டியாவது இல்லை. திறந்து வைத்திருக்கும் நிலையில் காற்றில் உள்ள ஈரப்பதத்தை உறிஞ்சி தண்ணீராக மாறுவதும் இல்லை. குருணை வடிவ யூரியா சாதாரண யூரியாவை விட எடை அதிகமாக இருப்பதால் பயிர்களுக்கு இடும் போது காற்றில் மற்றும் நீரினால் அடித்து செல்லப்படுதில்லை. ஆனால் சாதாரண யூரியா துகள்களாக இருப்பதால் இலையின் மேற்பரப்பில் பயிர்களுக்கு சேதத்தினை உண்டாக்குகின்றது.

எனவே அதிக பயனுள்ள குருணை வடிவ யூரியாவினை பயன்படுத்தி கூடுதல் மகசூல் பெற்று பலன் பெறும்படி கேட்டு கொள்கிறேன். இதனை போன்று டி.ஏ.பி. மற்றும் 20:20:0:13 காம்ப்ளக்ஸ் உரங்களை விவசாயிகள் வாங்கும் போது குறிப்பிட்ட உர நிறுவனத்தினை மட்டுமே கேட்கின்றனர். அனைத்து நிறுவன உரங்களின் தரமும், சத்துக்களின் அளவும் ஒரே அளவிலேயே உள்ளது. எனவே விவசாயிகள் பயிர்களுக்கு

தேவையான உரங்களை மண் பரிசோதனை பரிந்துரையின் படி தேவையான உரங்களை மட்டுமே இட்டு உற்பத்தியினை பெருக்கிட கேட்டு கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.

## வியாபாரிகள் இருப்பு வைத்திருந்த சரக்கு அதிகமாக விற்பனைக்கு வருகை துவரம்பருப்பு–சர்க்கரை விலை திடீர் சரிவு சர்வதேச மார்க்கெட் நிலவரத்தின் எதிரொலியாக பாமாயில் விலை உயர்வு

சென்னை, ஆக.6–

வியாபாரிகள் தாங்கள் இருப்பு வைத்திருந்த சரக்குகளை வெளிமார்க்கெட்டில் அதிகமாக விற்பனைக்கு கொண்டுவந்ததால் துவரம்பருப்பு, சர்க்கரை விலை திடீர் சரிவு ஏற்பட்டுள்ளது.

பாமாயில் விலை உயர்வு

கடந்த சில நாட்களாக சர்வதேச மார்க்கெட்டில் எண்ணை வகைகள் விலை உயர்ந்து வருகிறது. இதன் எதிரொலியாக கடந்த வாரம் ஒரு லிட்டர் பாமாயில் பாக்கெட் ரூ.40–க்கு விற்பனையானது, ரூ.45 ஆகவும், சன்பிளவர் ஆயில் ஒரு லிட்டர் பாக்கெட் முதல் ரகம் ரூ.57–க்கு விற்பனையானது, ரூ.62 ஆகவும், இரண்டாவது ரக சன்பிளவர் ஆயில் ஒரு லிட்டர் பாக்கெட் ரூ.50–க்கு விற்பனையானது, ரூ.56 ஆகவும் அதிகரித்துள்ளது.

கடலை எண்ணெய் ஒரு லிட்டர் பாக்கெட் ரூ.82–க்கு விற்பனையானது, ரூ.88 ஆகவும், தேங்காய் எண்ணெய் ஒரு லிட்டர் பாக்கெட் ரூ.75–க்கு விற்பனையாது, ரூ.80 ஆகவும் உயர்ந்துள்ளது.

குஜராத் மாநிலத்தில் இருந்து, பாகிஸ்தான், வங்காளதேசம், இலங்கை போன்ற நாடுகளுக்கு அதிக அளவில் ஏற்றுமதியாவதால் இந்தியாவில் பூண்டு விலை தொடர்ந்து ஏறுமுகமாக உள்ளது. கடந்த மாதம் முதல் ரக பூண்டு கிலோ ரூ.100–க்கு விற்பனையானது, ரூ.120 ஆகவும், இரண்டாம் ரக பூண்டு கிலோ ரூ.70–க்கு விற்பனையானது, ரூ.90 ஆகவும், மலைப்பூண்டு கிலோ ரூ.150–க்கு விற்பனையானது, ரூ.180 ஆகவும் விலை உயர்ந்துள்ளது என்று அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பிராணாவன் கூறினார்.

புது துவரம் பருப்பு

மராட்டிய மாநிலத்தில் இருந்து புது துவரம் பருப்பு வரத்து ஆரம்பித்துள்ளது. அடுத்த மாதம் பர்மா, சீனா தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு அதிக அளவில் பருப்பு வகைகள் இறக்குமதியாக உள்ளது. இதனால் பருப்பு வகைகள் மூட்டைக்கு ரூ.500 முதல் ரூ.1,000 வரை குறையும் என்று வியாபாரிகள் எதிர்பார்க்கிறார்கள். எனவே வியாபாரிகள் அதிக லாபம் சம்பாதிக்கலாம் என்ற நோக்கத்தில் குடோன்களில் இருப்பு வைத்திருந்த பருப்பு மூட்டைகளை வெளிமார்க்கெட்டுக்கு விற்பனைக்கு கொண்டு வந்துள்ளனர். இதனால் கடந்த மாதம் முதல் ரக துவரம் பருப்பு ஒரு கிலோ ரூ.72–க்கு விற்பனையானது, ரூ.65 ஆகவும், இரண்டாம் ரக துவரம்பருப்பு கிலோ ரூ.66–க்கு விற்பனையானது, ரூ.58 ஆகவும் குறைந்துள்ளது. கடந்த மாதம் முதல் ரக உளுத்தம்பருப்பு கிலோ ரூ.83–க்கு விற்பனையானது, ரூ.77 ஆகவும், இரண்டாம் ரக பர்மா உளுத்தம்பருப்பு கிலோ ரூ.78–க்கு விற்பனையானது, ரூ.71 ஆகவும், பாசிபருப்பு முதல் ரகம் கடந்த மாதம் கிலோ ரூ.92–க்கு விற்பனையானது, ரூ.82 ஆகவும், இரண்டாம் ரக பாசிபருப்பு கிலோ ரூ.85–க்கு விற்பனையானது, ரூ.75 ஆகவும் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

சர்க்கரை விலை வீழ்ச்சி

கடந்த மாதம் மத்திய அரசு இந்தியாவில் உள்ள அனைத்து மில்களுக்கும் 12 லட்சம் டன் சர்க்கரை ஒதுக்கீடு செய்தது. இந்த ஆண்டு மக்களின் தேவையை கருதி 17 லட்சம் டன் சர்க்கரை ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும் வடமாநிலங்களில் தென் மேற்கு பருவ மழை நன்றாக பெய்துள்ளதால் கரும்பு விளைச்சல் அமோகமாக உள்ளது.

எனவே உயர்ந்து வந்த சர்க்கரை மூட்டைக்கு ரூ.100 வரை குறைந்துள்ளது. விலை உயரும் என்று எதிர்பார்த்து ஏராளமான வியாபாரிகள் சர்க்கரை மூட்டைகளை இருப்பு வைத்திருந்தனர். மேலும் இருப்பு வைத்தால் நஷ்டம் ஏற்படும் என்பதால் இருப்பு வைத்திருந்த சர்க்கரை மூட்டைகளை வெளிமார்க்கெட்டில் விற்பனைக்கு கொண்டுவந்துள்ளனர். இதனால் கடந்த வாரம் ஒரு கிலோ சர்க்கரை ரூ.30–க்கு விற்பனையானது, ரூ.28.50 ஆக குறைந்துள்ளது என்று வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஒரு கிலோ தனியா (மல்லி) ரூ.100 வரை விற்பனையானது. இதனால் இந்த ஆண்டும் நல்ல விலை கிடைக்கும் என்று ராஜஸ்தான் மாநிலம் மற்றும் தமிழ்நாட்டில் விருதுநகர், சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய பகுதிகளில் தனியா பயிர்களை விவசாயிகள் அதிகஅளவில் பயிர்செய்தனர். இதனால் விளைச்சல் அதிகரித்து, கடந்த மாதம் ஒரு கிலோ தனியா ரூ.60–க்கு விற்பனையானது, ரூ.45 ஆக சரிந்துள்ளது. தமிழ்நாட்டில் விளைச்சல் நன்றாக இருப்பதால் முதல் ரக குண்டு

*மிளகாய் வத்தல் கிலோ ரூ.120–க்கு விற்பனையானது, ரூ.90 ஆகவும், இரண்டாவது ரக குண்டு மிளகாய் வத்தல் கிலோ ரூ.90–க்கு விற்பனையானது, ரூ.60 ஆகவும், நீட்டு மிளகாய் வத்தல் கிலோ ரூ.75–க்கு விற்பனையானது, ரூ.60 ஆகவும் குறைந்துள்ளது.*